முருகப்பெருமான் துணை

**மகான் நமிநந்தியடிகள் நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.11.2023**, வியாழக்கிழமை

1. தணிகாசலனார் அவதாரமே
தன்னிகரில்லாத தவபலத்தால்
கனிவேலவனே விரும்பி ஏற்க
கலியினில் இடர் வெல்ல வந்த ஞானியே
2. ஞானியே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உன் பெருமை கூறி
இனிமைபட சோபகிருது துலை திங்கள்
இயம்பிட மூவையோர் திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 16ம் நாள், 02.11.2023, வியாழக்கிழமை)
3. குருவாரமதில் அறிவுரை ஆசி
கூறிடுவேன் நமிநந்தியடிகளும்
குருவரங்கன் ஞான மார்க்கம்
குவலயத்தில் பரவி நின்றால்
4. பரவிடவே பேருலகில் மாற்றம்
பண்பான உலக மக்கள்
துறவிபோல நேர்மை தருமம்
தியாகம்பட வாழும் மாற்றம் காண்பர்
5. காண்கவே மாதரும பலம்
கலி அடையும் வண்ணம் செய்ய
உண்மைபட எங்கும் நீதி
உயர்வாக ஏற்கப்பட்டு இனிதே
6. இனிதே சொல் செயலனைத்தும்
எதேச்சையாக வாஞ்சையாக
கனிவுகருணை மிகுந்தபடி
கட்டம் போக்கி காக்கும் வண்ணம்

7. வண்ணம் ஆற்றல் பெருகி
வலிமைமிக்க லோகம் ஆகும்
எண்ணம் சமத்துவம்பட
எல்லாமே சமதர்ம வழியாக

8. ஆகவே மாற்றம்பல கண்டு
அவதார அரங்கன் நோக்கமாக
வகைபட வளர்ச்சி கண்டு
வையகம் நல்ல தலைமை காணும்

9. காணவே கலகம் கடந்த
கண்ணிய அமைதி பூமியாக
ஞானமாகச் சிறந்து நன்கு
ஞானிகளை அளவிலா படைத்து

10. படைத்து ஞான ஆட்சிதனை
பழுதின்றி பேருலகம் அமைய
தடையற ஆறுமுகனார் ஆசிபட
தரணியில் அற்புதம் நடக்கும்

11. நடக்கவே ஞானதேசிகன் ஆசி
நல்வழிகாட்டலில் சீடர்களும்
இடர்வென்று நல்லாட்சித் தருவர்
இயம்பிய அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–